# குளியாபிட்டி பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைக் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 யூலை 01 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய குளியாபிட்டி பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களின் மீது ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி குளியாபிட்டி பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 4,832,276 இனால் அதிகரித்து கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஓய்வூதியப் பங்களிப்பு பட்டியல் பெறுமானமான ரூபா 232,560 ஆனது கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

09 கணக்கு விடயங்கள் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54,795,100 ஆக இருந்ததுடன் துணைப்பதிவேடு/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64,285,155 ஆக இருந்தது.

**1.3.3 தொங்கல் கணக்குகள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்ட கணக்குகளின் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,977 ஆக இருந்தது.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு காலத்திற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,592,119 ஆக இருந்தது.

**1.3.5 இணங்காமைகள்**

உள்ளூராட்சி ஆணையாளரின் (வடமேல்) 1999 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய 99/01 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் படி சபையின் வாகனங்களுக்காக மாதாந்தம் பாவிக்கப்பட வேண்டிய எரிபொருள் எல்லை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 40,610,717 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 26,218,797 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடுகள்**

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் வருமானக் கடன்பட்டோரின் கீழ் இலங்கை மின்சார சபைகள் கணக்கில் காணப்பட்ட ரூபா 142,560 மீதி இனங்கண்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக் கணக்கிலிருந்து வழங்கப்பட்டும் கொடுப்பனவுக்காக 6 மாதத்திற்கு மேற்பட்ட காலம் சமர்ப்பிக்கப்படாத ரூபா 108,940 பெறுமதியான 34 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாண இலக்கம் 396 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டும் வசூலிக்கப்படாத ரூபா 2,044 பெறுமதியான காசோலை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 03 வங்கிக் கணக்குகளுக்குரியதாகக் காணப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள் ரூபா 551,121 சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாண இலக்கம் 189 மற்றும் 486 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ள படியான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள படியான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | இறைவரி மற்றும் வாடகை | 3,581 | 302 | 417 | 367 | 311 | 512 |
| (ii) | வாடகை | 5,685 | 3,650 | 26 | 6,134 | 3,340 | 265 |
| (iii) | அனுமதிப்பத்தரக் கட்டணங்கள் | 711 | 733 | 70 | 741 | 661 | 108 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 39,935 | 78,181 | -- | 54,191 | 55,678 | -- |
| | மொத்தம் | 49,912 | 82,866 | 513 | 61,433 | 59,990 | 885 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் ஒரு நீதவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டுள்ள ரூபா 27,263,036 தொகையான தண்டப்பணம் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடம் இருந்து ரூபா 36,886,760 முத்திரைக் கட்டணம் பெறப்பட வேண்டியிருந்தது.

### 2.3.4 ஆதனவரி

மீளாய்வாண்டின் இறுதியில் தலைமைக்காரியாலயம் மற்றும் ஹொரம்பாவ உபகாரியாலயங்களின் ஆதனவரி நிலுவை ரூபா 155,019 ஆகக் காணப்பட்ட போதிலும் 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 33 ஆவது விதியின் பிரகாரம் வரி செலுத்துவதிலிருந்து தவிர்ந்திருந்த நபர்களின் பட்டியல், சொத்துக்களைத் தடைசெய்யும் பிடியாணைஏடு ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும்

ஆதனவரி எழுதுவினைஞரினால் தயாரிக்கப்பட்டு தலைவரின் கையொப்பத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிலுவை வரி சம்பந்தமாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 161(1) இன் பிரகாரம் மேலதிகக் கட்டணம் அறிவிடுவது தொடர்பாக உரிய அறிவுறுத்தல் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 சபைக்ச் சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு விடல்

சபைக்குச் சொந்தமான ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 388,846 ஆன 06 இறைச்சிக்கடைகள், 08 மீன் கொட்டில்கள் மற்றும் 23 குத்தகைச் சொத்துக்களுக்காக வாடகையாளர்கள் முன்வராமையினால் மீளாய்வாண்டிற்கு வாடகைக்கு விடமுடியாதிருந்தது. அவ்வாறே இது சம்பந்தமாக உள்ளுராட்சி ஆணையாளரின் 2001 சனவரி 03 ஆந் திகதிய 1/அவ/பொது/2001 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 பஸ்நிலைய கடை வாடகைக்கு விடல்

கட்டுபொத்த பஸ்நிலையத்தின் 12 கடைகளுக்குமான ஆகக் குறைந்த கேள்வியான ரூபா 60,000 தொகைக்கு தொடர்ந்தும் கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் கேள்விதாரர்கள் முன்வராத காரணத்தினால் வாடகைக்கு விட முடியாதிருந்தது.

### 2.3.7 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஏக்கர்வரி மீதி ரூபா 262,002 ஆக இருந்ததுடன் ஏக்கர்வரி பதிவேட்டின் பிரகாரம் வரி அறவிடப்படுகின்ற சொத்துக்களின் எண்ணிக்கை 204 இல் 105 இற்கு 1 வருடத்திற்கு மேற்பட்ட நிலுவை காணப்பட்டது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி 33 தொடக்கம் 41 வரையாகவுள்ள விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரணங்களுடன் கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின வகை** | **பாதீடு செய்யப் பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப் பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| **<u>மீண்டுவரும் செலவுகள்</u>** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** | **ரூபா "000** |
| ஆளணிக்கான வேதனம் | 23,897 | 25,467 | (1,570) | 24,162 | 23,936 | 226 |
| ஏனையவைகள் | 14,781 | 16,790 | (2,009) | 15,131 | 9,838 | 5,293 |
| உப மொத்தம் | 38,678 | 42,257 | (3,579) | 39,293 | 33,774 | 5,519 |
| மூலதனச் செலவு | 13,527 | 89,495 | (75,968) | 29,051 | 37,050 | (7,999) |
| முழு மொத்தம் | 52,205 | 131,752 | (79,547) | 68,344 | 70,824 | (2,480) |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலைத் தரம் | 02 | 02 |
| இரண்டாம் தரம் | 52 | 47 |
| ஆரம்ப தரம் | 40 | 37 |
| ஏனையவர்கள் (சமயா சமயம்/ தற்காலிகம்) | -- | 03 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

2010 பெப்ரவரி 05 ஆந் திகதி ரூபா 130,862 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொங்ரீட் பொருட்களை உற்பத்தி செய்யும் இயந்திரம் கொங்ரீட் கற்கள் உற்பத்திக்கான ஏற்பாடுகள் கிடைக்காமை, உற்பத்திப் பகுதியில் பொருத்தப்படாத காரணங்களினால் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அதில் கொங்ரீட் கற்கள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.6.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,425,973 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.6.3 அறவிடப்பட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த பதவியினர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 141,761 ஆக இருந்ததுடன் இது 3 வருடத்திற்கும் மேலாக காணப்படுகின்ற மீதியாகும்.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும்

பெறுமதி சேர்வரி மற்றும் முத்திரைக் கட்டணங்களாக சபையினால் 2008 மே தொடக்கம் 2009 யூலை வரையான வரித்தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு ஒழுங்கான முறையில் அனுப்பி வைக்கப்படாமையினால் தாமதக் கட்டணமாக ரூபா 553,551 தொகையானது மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சபை அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட கிதலவ அபிவிருத்தியடைந்த கிரமாப் பிரதேசமாக 1996 நவம்பர் 22 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலினால் தெரிவிக்கப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்தும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடமிருந்தும் பெறப்பட வேண்டிய அங்கீகாரம் பெறப்படாத காரணத்தினால் அப் பிரதேசத்திற்குரிய 2006 திசெம்பர் 31 வரையும் பற்றுச்சீட்டிடப்பட்டுக் காணப்பட்ட ரூபா 48,865 வரித்தொகை உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபையில் சேவையாற்றி ஓய்வூதியம் பெற்ற உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களுக்குரிய சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய முறையில் செலுத்தப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 984,436 ஆகக் காணப்பட்டது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணையாக ரூபா 19,364 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்தும் அவ் அறவிடல்கள் சபையின் எவ் உத்தியோகத்தர்களுக்குரியதாக இருந்தது என சபை அறிந்திருக்கவில்லை.

## 2.10 புத்தகங்கள் ஏடுகள் பராமரிக்கப்படுதல்

(அ) 2010 நவம்பர் மாதத்தின் பின்னர் 04 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 47,855 பெறுமதியான காகிதாதிகள் மற்றும் காரியாலய பொருட்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் வீதி விளக்குகளை பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,248,240 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான மின்விளக்குகள் காணப்படுகின்ற இடங்களை இனங்காணக்கூடிய வகையில் முறையான ஏடொன்று சபையினால் மீளாய்வாண்டின் போதும் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காசோலைப்பதிவேடு, செலவினப் பதிவேடு, ஆதனவரி மற்றும் ஏக்கர் வரிப் பதிவேடு, கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் மீளாய்வாண்டில் உரிய முறையின் பிரகாரம் பராமரிக்கப்பட்டிராததுடன் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் முற்பணத் தீர்ப்பனவு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2.11 செயலாற்றல்

(அ) நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம் நிதியப் பாய்ச்சலாக கருதப்பட்டு மதிப்பிடப்பட்ட ரூபா 1,800,000 கிரயமான 5 வேலைகள் பல்வேறு காரணங்களினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டின் மூலம் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 975,000 தொகைக்குரிய 7 நலன்புரிச் செயற்பாடுகள் மீளாய்வாண்டினுள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினுள் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமானக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிர்வாகம்